



# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®







ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 377 | உள்ளூர் - 31.12.2025 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 377 | வெளியூர் - 01.01.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


2026 புத்தாண்டு: 12 ராசிகளுக்கான பலன்கள் & பரிகாரங்கள்!

தொடரும் தூய்மை பணியாளர்கள் போராட்டம்

அரசு ஊழியர்களுக்கு 2026-ல் பணமழை!!

புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்



இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று திரும்பி சென்றதையொட்டி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் புத்தகம் வழங்கி வழியனுப்பி வைத்தார்.

# ஜனவரி 6-ல் தமிழக அமைச்சரவை கூட்டம்!

சென்னை, டிச. 31–

ஜனவரி 6ம் தேதி முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளது.

2026ம் ஆண்டுக்கான முதல் சட்டசபை கூட்டத்தொடர், ஜனவரி 20ம் தேதி காலை 9.30 மணிக்கு கவர்னர் ஆர்என் ரவியின் உரையுடன் தொடங்குகிறது. ஜனவரி 6ம் தேதி முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில், கவர்னர்



உரையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

அமைச்சரவை கூட்டத்தில், இடைக்கால பட்ஜெட்டில் இடம்பெற உள்ள முக்கிய திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன. தேர்தலுக்கு முன்னதாக வரும் பட்ஜெட் என்பதால், இது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# பொங்கல் பரிசு தொகுப்பு:

# ஒரு நாளைக்கு 400 பேருக்கு!

## அறிவிப்புகளை வெளியிடப்போகும் முதல்வர்?

சென்னை, டிச. 31–

பொங்கல் பண்டிகை நெருங்க நெருங்க பொங்கல் பரிசு தொகுப்பு குறித்த எதிர்பார்ப்பு மக்களிடையே அதிகரித்த வண்ணம் இருக்கிறது. பொங்கல் பண்டிகைக்காக தமிழ்நாடு அரசு ரேஷன் கடைகள் மூலம் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணிகளை தீவிரப்படுத்தி வருகிறது. பொங்கல் பரிசு தொகுப்பில் அரிசி, சர்க்கரை மற்றும் ரொக்கப்பணம் வழங்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே பொங்கல் பரிசு தொகுப்பில் வழங்குவதற்காக அரிசி , சர்க்கரை உள்ளிடவை ரேஷன் கடைகளுக்கு பெருமளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரான நந்தகுமார் அனைத்து மண்டல இணை பதிவாளர்களுக்கும் மிக முக்கியமான ஒரு சுற்றறிக்கையை அனுப்பி இருக்கிறார்.

ரேஷன் கடைகள் மூலம் பொங்கல் பரிசு தொகுப்பினை ரேஷன் அட்டைதாரர்களுக்கு






வழங்குவது தொடர்பான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவும், டோக்கன் வினியோகம் குறித்தும் பின்வரும் அறிவுரைகளை பின்பற்றி திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட வேண்டும் என்றும் அந்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி அந்தந்த மண்டலங்களில் செயல்படும் நியாய விலை கடைகளோடு இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கு ஏற்ப ஜனவரி 2ஆம் தேதிக்குள் டோக்கன்களை அச்சிட்டு விநியோகம் செய்திட தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஜனவரி 2ஆம் தேதிக்குள் டோக்கன்கள் அச்சிடும் பணி முடிந்துவிடும்.

இந்த டோக்கன்களில் பொங்கல் பரிசு தொகுப்பு பெற வேண்டிய நாள் மற்றும் நேரம் உள்ளிட்டவை இடம்பெற்றிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து ரேஷன் கடை ஊழியர்கள் ரேஷன் அட்டைதாரர்களின் வீடுகளுக்கே சென்று இந்த டோக்கன்களை வழங்கிட வேண்டும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம் தொடங்கக்கூடிய முதல் நாளில் முற்பகலில் 100 ரேஷன் அட்டைதாரர்களுக்கும் பிற்பகலில் 100 ரேஷன் அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம் செய்திட ஏதுவாக டோக்கன்கள் வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவது நாட்களில் இருந்து காலையில் 200 பேர், பிற்பகலில் 200 பேர் என மொத்தம் 400 பேருக்கு பொங்கல் பரிசு தொகைக்கு விநியோகம் செய்திட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழக்கூடிய வகையிலோ அல்லது அதிக கூட்ட நெரிசல் ஏற்படக்கூடிய வகையிலோ செயல்படக்கூடிய பகுதிகளில் இருக்கும் கடைகளில் முன்கூட்டியே தயார் செய்யப்பட்டு உரிய போலீஸ் பாதுகாப்புகள் பெறப்படுவதை உறுதி செய்துவிட வேண்டும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது 2.2 கோடி ரேஷன் கார்டுகள் பயன்பாட்டில் இருக்கின்றன . இவற்றில் அரிசி கார்டு வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே பொங்கல் பரிசு தொகுப்பு கிடைக்கும். பொங்கல் பண்டிகைக்கு முன்பாகவே அனைவருக்கும் பொங்கல் பரிசு கிடைத்திடும் வகையில் ஏற்பாடுகளை செய்ய அரசு முடிவு செய்துள்ளது. பொங்கல் பரிசு தொகுப்பில் என்னென்ன இடம்பெற உள்ளது, ரொக்கப்பணம் இடம்பெறுமா , அப்படி இடம்பெற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும் என்பன உள்ளிட்ட அறிவிப்புகளை எல்லாம் முதலமைச்சர் ஸ்டாலின் அதிகாரப்பூர்வமாக வெளியிடுவார்.

# தொடர்ந்து 6-வது நாளாக தூய்மை பணியாளர்கள் போராட்டம்!

சென்னை, டிச. 31–

சென்னை மாநகராட்சி மண்டலம் 5, 6 ஆகியவற்றில் தூய்மைப் பணி தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்ப ட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து 300–க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் கடந்த 1–ந்தேதி முதல் ரிப்பன் கட்டிடம் முன்பு காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இரவு, பகல் பாராமல் அவர்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அவர்களின் போராட்டத்திற்கு, அ.தி.மு.க., த.வெ.க., பா.ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, நாம் தமிழர் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. இதேபோல, திரைப்பட நடிகர் நடிகைகளும் நேரில் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். 13–வது நாளாக இன்றும் தூய்மை பணியாளர்களின் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

இதனிடையே, அனுமதிக்கப்படாத இடத்தில் தூய்மை பணியாளர்கள் போராட்டம் நடத்துவதை





ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், போராட்டம் நடத்தும் இடத்தில் இருந்து தூய்மை பணியாளர்களை விரைவில் அப்புறப்படுத்த வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து, தூய்மை பணியாளர்கள் தங்கள் போராட்டத்தை தொடர்ந்தால் நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாக நேரிடும் என காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், போராட்டம் நடத்தி வரும் தூய்மை பணியாளர்களுடன் அமைச்சர் சேகர் பாபு, அமைச்சர் கே.என்.நேரு, மேயர் பிரியா ஆகியோர் இன்று 8–ம் கட்டமாக பேச்சுவார்த்தை நடத்தினர். சில நிமிடங்கள் மட்டுமே நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாததால், பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தூய்மை பணியாளர்கள், “பேச்சுவார்த்தைக்கு அழைத்ததையொட்டி அமைச்சர்கள், மேயரை சந்தித்து பேசினோம். ஆனால் எங்கள் கோரிக்கை பற்றி பேச முடியாது என ஆணவத் திமிரில் அரசு இருந்தால் அதற்கான பதிலை நாங்கள் தருவோம். நாங்கள் தொடர்ந்து போராடுவோம், முடிந்தால் எங்களை அப்புறப்படுத்துங்கள். எங்கள் போராட்டம் தொடரும். இனி முதல்–அமைச்சர் தலைமையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில்தான் பங்கேற்போம்” என்று தெரிவித்துள்ளனர்.

# திருப்பரங்குன்றம் விவகாரம்: சிவன் பார்த்துக் கொள்வார்! மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான்!

மதுரை, டிச. 31–

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் புதன்கிழமை சாமி தரிசனம் செய்த மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் செய்தியாளர்களுடன் பேசியதாவது:

“திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தமிழ் மக்களும் ஹிந்துக்களும் தீபம் ஏற்றலாம் என்று நீதிபதி அளித்துள்ள தீர்ப்பை நிறைவேற்றாதது முட்டாள்தனம். இந்த விவகாரத்தை அரசியல் ரீதியில் தமிழக அரசு கையாள்வது கண்டிக்கத்தக்கது. திருப்பரங்குன்றம் மலை மீது தீபமேற்றுவதைத் தடுக்க நினைப்பவர்களை சிவன் பார்த்துக் கொள்வார்.” எனத் தெரிவித்துள்ளார்.



மேலும், காசி தமிழ் சங்கமம் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும், தேசிய கல்விக் கொள்கை தாய்மொழியை ஊக்குவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.




தலையங்கம்

மதுரை மணி

புதன்கிழமை 31.12.2025

விசுவாவசு தமிழ் வருடம்

மார்கழி மாதம் 16-ம் தேதி

## மருத்துவ உலகமே ஷாக்..!!



உணவுப் பொருட்களில் கவர்ச்சிக்காக சேர்க்கப்படும் செயற்கை நிறமூட்டிகள், குறிப்பாக ஆரமைன் (Auramine) போன்ற வேதிப்பொருட்கள், இன்று அமைதியான முறையில் ஒரு மிகப்பெரிய சுகாதாரப் பேரழிவை நோக்கி நம்மைத் தள்ளிக் கொண்டிருக்கின்றன. ஜவுளித் துறையில் துணிகளுக்கு சாயமேற்றப் பயன்படுத்தப்படும் இந்த வேதிப்பொருள், சற்றும் மனிதாபிமானமின்றி மிட்டாய்கள், இனிப்புகள் மற்றும் தெருவோர உணவுகளில் கலக்கப்படுவது மருத்துவ உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மருத்துவ ரீதியாக பார்க்கையில், 'ஆரமைன்' என்பது ஒரு நச்சுத்தன்மை வாய்ந்த காரணி மட்டுமல்ல, அது மனித டிஎன்ஏ–வை சிதைக்கும் வல்லமை கொண்டது என ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

இது கல்லீரல் பாதிப்பு மற்றும் புற்றுநோய் கட்டிகள் உருவாவதற்கான வாய்ப்புகளை பலமடங்கு அதிகரிக்கிறது. புற்றுநோய் என்பது ஒரே நாளில் உருவாவதல்ல; நாம் பல ஆண்டுகளாக உட்கொள்ளும் இத்தகைய நச்சு கலந்த உணவுகள், உடலில் ஒரு வேதிவினை மாற்றத்தை ஏற்படுத்தி, நீண்ட காலத்திற்குப் பிறகு உயிர்க்கொல்லி நோயாக உருவெடுக்கின்றன.

குறிப்பாக, பள்ளி செல்லும் குழந்தைகள் இத்தகைய வண்ணமயமான தின்பண்டங்களை அதிகம் விரும்பி உண்பதால், அவர்களது எதிர்கால ஆரோக்கியம் கேள்விக்குறியாகிறது.

வளர்சிதை மாற்றங்கள் வேகமாக நடக்கும் பருவத்தில், இத்தகைய வேதிப்பொருட்கள் குழந்தைகளின் செரிமான மண்டலத்தை மிக எளிதாகப் பாதிக்கின்றன. செயற்கை சாயங்கள், பதப்படுத்திகள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஆகிய மூன்றும் இணைந்து புற்றுநோய் உருவாவதற்கான ஒரு 'செழுமையான களத்தை' நம் உடலுக்குள் அமைக்கின்றன.

இது ஒரு தனிப்பட்ட நபர் சார்ந்த பிரச்சனை அல்ல; இது ஒட்டுமொத்த சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும். தொழிற்சாலைகளுக்காக தயாரிக்கப்பட்ட ஒரு ரசாயனம், நம் சமையலறைக்கோ அல்லது குழந்தைகளின் தின்பண்ட பைகளுக்கோ வருவது மிகப்பெரிய குற்றம். எனவே, நுகர்வோர் விழிப்புணர்வுடன் உணவுப் பொருட்களின் தரத்தை சோதிப்பதோடு, அரசும் இதற்கான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கடுமையாக்க வேண்டும். வராமல் தடுக்கப்படும் புற்றுநோயே மருத்துவத்துறையின் உண்மையான வெற்றி என்பதை உணர்ந்து, செயற்கை சாயங்கள் கலந்த உணவுகளைத் தவிர்ப்பதே புத்திசாலித்தனம்.

## சினிமா துளிகள்..!

### பெரிய ஹீரோக்கள் எல்லாம் இல்லை... இவர்தான் மெயின் கேரக்டர்...புது அப்டேட்



ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் கடைசியாக வெளியான படம் மதராஸி. இதில் சிவகார்த்திகேயன், ருக்மணி வசந்த் நடித்திருந்தனர். இப்படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றது. இந்நிலையில் தான் இயக்கப்போகும் அடுத்த படம் குறித்து பேசியுள்ளார் முருகதாஸ்.

இயக்குநர்கள் ராம், மாரி செல்வராஜ், கிருத்திகா உதயநிதி, அஸ்வந்த் மாரிமுத்து ஆகியோருடன் இணைந்து தனியார் யூடியூப் சேனல் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் இதுகுறித்து பேசியுள்ளார். அப்படம்தான் தான் முதலில் இயக்கவேண்டும் என நினைத்த படம் என்றும், அது ஒரு கிராபிக்ஸ் படம், அதில் குரங்கு தான் மெயின் ரோல், அது குழந்தைகளுக்கானது எனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பேசிய அவர்,

"நான் எனது அடுத்தத் திரைப்படத்தை குரங்கை முதன்மை கதாபாத்திரமாகக் கொண்டு (கிராபிக்ஸ் படம்) இயக்கத் திட்டமிட்டுள்ளேன். இதுவே எனது முதல் படமாக இருக்க வேண்டும் என்று நான் நினைத்த படம், நான் உதவி இயக்குநராகப் பணியாற்றிய காலத்திலிருந்தே இந்த எண்ணம் என்னிடம் இருந்தது. இந்தப் படம் முக்கியமாக குழந்தைகளை மையப்படுத்தி உருவாக்கப்படும்." என தெரிவித்துள்ளார்.

# 8-வது சம்பள கமிஷன்: அரசு ஊழியர்களுக்கு 2026-ல் பணமழை!!

டெல்லி, டிச. 31–

இந்தியாவில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு தற்போது ஏழாவது சம்பள கமிஷன் அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஏழாவது சம்பள கமிஷனின் காலம் முடிவடைந்து ஜனவரி ஒன்றாம் தேதியிலிருந்து 8ஆவது சம்பள கமிஷன் அடிப்படையில் புதிய சம்பளம் வழங்கப்பட வேண்டும். 8ஆவது சம்பள கமிஷனே இப்போதுதான் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதால் 2028 ஆம் ஆண்டில் தான் சம்பள கமிஷன் அடிப்படையில் புதிய சம்பளம் கைக்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் 2026 ஆம் ஆண்டின் பொருத்தவரை மத்திய அரசு ஊழியர்களுக்கு பல்வேறு ஜாக்பாட்டுகள் கிடைக்கப் போகும் ஆண்டாக தான் இருக்கப் போகிறது.




8ஆவது சம்பள கமிஷன் நடைமுறைக்கு வருவது தாமதமானாலும் அந்த தாமதமாக கூடிய காலத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளத்தொகை 2026 ஜனவரி ஒன்றாம் தேதியிலிருந்து அரியர் தொகையாக கணக்கிடப்பட்டு வழங்கிவிடும் . அதாவது இந்த இரண்டு ஆண்டுகள் தாமதமானதால் கிடைக்காமல் போன சம்பள உயர்வு தொகை கணக்கிடப்பட்டு வழங்கப்படும். இது மட்டும் இல்லாமல் எட்டாவது சம்பள கமிஷனே நடை முறைக்கு வரவில்லை என்பதால் வழக்கம் போல அரசு ஊழியர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு முறை கிடைக்கக்கூடிய அகவிலைப்படி ஜனவரி மற்றும் ஜூலை ஆகிய இரண்டு மாதங்களிலும் கிடைக்கும். அந்த வகையில் பார்க்கும்போது புதிய சம்பள கமிஷன் நடைமுறைக்கு வருவதற்கு தேவைப்படும் இந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசு ஊழியர்களுக்கு நான்கு அகவிலைப்படி உயர்வு கிடைக்கப்போகிறது. தற்போது மத்திய அரசு ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தில் 58 சதவீத தொகை அகவிலை படியாக கிடைக்கிறது. இது அடுத்த இரண்டு ஆண்டுகளில் இன்னும் உயரப் போகிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு 2026 ஆம் ஆண்டு மிக முக்கியமான ஒரு ஆண்டாக இருக்கப் போகிறது . ஏனென்றால் சம்பள கமிஷன் அமைக்கப்பட்டு இந்த சம்பள கமிஷன் அடுத்த ஆண்டு முழுவதும் தன்னுடைய வேலைகளை தீவிரமாக மேற்கொள்ளும். அதாவது நாட்டின் தற்போதைய நிதி நிலவரம் என்ன, அரசுக்கு இருக்கக்கூடிய செலவுகள் என்ன, சம்பளம் மற்றும் ஒய்வூதியத்திற்காக அரசு எவ்வளவு நிதியை ஒதுக்கீடு செய்யப்போகிறது ,தற்போது இந்தியாவில் ஒரு குடும்பம் வசிப்பதற்கு எவ்வளவு பணம் தேவை உள்ளிட்டவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு ஃபிட்மன்ட் ஃபேக்டர் என்பதை நியமனம் செய்வார்கள்.

இது 2026 ஆம் ஆண்டிலேயே நிர்ணயம் செய்யப்பட்டு விடும் என சொல்லப்படுகிறது அவ்வாறு இந்த ஃபிட்மன்ட் ஃபேக்டர் நியமனம் செய்யப்பட்டு விட்டாலே மத்திய அரசு ஊழியர்களின் சம்பளம் எவ்வளவு உயர போகிறது என்பதை எளிதாக கண்டுபிடித்து விட முடியும் . மத்திய அரசு ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தோடு இந்த ஃபிட்மன்ட் ஃபேக்டர் எண்ணை பெருக்கினால் என்ன தொகை வருகிறதோ அதுதான் அவர்களுக்கான புதிய சம்பளம்.

தற்போது அரசு மத்திய அரசு பணியில் குரூப் ஏ,பி,சி, டி என பிரித்து இருக்கிறார்கள், இதில் 18 லெவல் வேலைகளும் அதற்கான சம்பளமும் உள்ளன. இவர்களுக்கு சம்பளம் எவ்வளவு உயரம் என்பதை நாம் தற்போது தெரிந்து கொள்ளலாம். 2.15 என ஃபிட்மன்ட் ஃபேக்டர் கணக்கில் கொள்ளப்படலாம் என சொல்லப்படுகிறது. அப்படி பார்க்கும்போது

லெவல் 1 – தற்போதைய சம்பளம் : ரூ. 18,000; புதிய சம்பளம் : ரூ 38,700 (வித்தியாசம்: ரூ. 20,700)

லெவல் 5 – தற்போதைய சம்பளம் : ரூ. 29,200; புதிய சம்பளம்: ரூ. 62,780 (வித்தியாசம்: ரூ. 33,580)

லெவல் 10 – தற்போதைய சம்பளம் : ரூ. 56,100; புதிய சம்பளம்: ரூ. 1,20,615 (வித்தியாசம்: ரூ. 64,515)

லெவல் 15 – தற்போதைய சம்பளம் : ரூ. 1,82,200; புதிய சம்பளம்: ரூ. 3,91,730 (வித்தியாசம்: ரூ. 2,09,530)

லெவல் 18 – தற்போதைய சம்பளம் : ரூ. 2,50,000; புதிய சம்பளம்: ரூ. 5,37,500 (வித்தியாசம்: ரூ. 2,09,530)

லெவல் 18இல் இருப்பவர்கள் குரூப் ஏ நிலையில் இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள். இவர்களுக்கு அதிகபட்ச சம்பளம் கிடைக்க உள்ளது. மத்திய அரசு ஊழியர்களுக்கான இந்த சம்பள உயர்வு என்பது மாநில அரசு ஊழியர்களின் சம்பள உயர்விலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் 2026 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களுக்கு முக்கியமான ஆண்டாக உள்ளது.

# 2026-ல் அரசு ஊழியர்களுக்கு டபுள் கொண்டாட்டம்: மொத்தம் 98 நாட்கள் விடுமுறை..!

சென்னை, டிச.31–

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

வருகிற 2026 ஆம் ஆண்டில் ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்த்து, கீழ்க்காணும் 24 நாட்கள் அரசு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்படுகின்றன. இவை தமிழ்நாட்டிலுள்ள வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் பொருந்தும். அதன்படி விடுமுறை நாட்களின் முழு விபரம் பின்வருமாறு:




* ஆங்கில புத்தாண்டு– ஜனவரி 1 (வியாழன்)
*பொங்கல் – ஜனவரி 15 (வியாழன்)
* திருவள்ளுவர் நாள்– ஜனவரி 16 (வெள்ளி)
* உழவர் திருநாள்– ஜனவரி 17 (சனி)
* குடியரசு நாள் – ஜனவரி 26 (திங்கள்)
* தைப்பூசம்– பிப்ரவரி 1 (ஞாயிறு)
*தெலுங்கு வருட பிறப்பு – மார்ச் 19 ( வியாழன்)
*ரம்ஜான் – மார்ச் 21 (சனி)
*மகாவீரர் ஜெயந்தி – மார்ச் 31 (செவ்வாய்)
*வங்கிகள் ஆண்டு கணக்கு – ஏப்ரல் 1 (புதன்)
*புனித வெள்ளி – ஏப்ரல் 3 (வெள்ளி)
*தமிழ்புத்தாண்டு – ஏப்ரல் 14 (செவ்வாய்)
*மே நாள் – மே 01(வெள்ளி)
*பக்ரீத் – மே 28 (வியாழன்)
*மொகரம் – ஜூன் 26 (வெள்ளி)
*சுதந்திர தினம் – ஆகஸ்ட் 15(சனி)
*மிலாதுநபி – ஆகஸ்ட் 26 (புதன்)
*கிருஷ்ண ஜெயந்தி – செப்டம்பர் 04 (வெள்ளி)
*விநாயகர் சதுர்த்தி – செப்டம்பர் 14 (திங்கள்)
*காந்தி ஜெயந்தி – அக்டோபர் 02 (வெள்ளி)
*ஆயுத பூஜை – அக்டோபர் 19 (திங்கள்)
*விஜயதசமி – அக்டோபர் 20 (செவ்வாய்)
*தீபாவளி – நவம்பர் 08 (ஞாயிற்றுக்கிமை)
*கிருஸ்துமஸ் – டிசம்பர் 25 (வெள்ளி)

தமிழ்நாடு அரசு 2026க்காக 24 பொது விடுமுறைகள் அறிவித்துள்ளது. இதில் சில விடுமுறைகள் ஏற்கனவே ஞாயிறு அல்லது 2வது/4வது சனி அன்று வருவதால், அவை மேலே கணக்கில் சேர்ந்துவிடும். அதனால், ஞாயிறு அல்லது 2வது/4வது சனி அல்லாத நாட்களில் வரும் கூடுதல் வங்கி விடுமுறைகள் மட்டும் தனியாக கணக்கிடப்படுகின்றன.இவ்வாறு கூடுதலாக வரும் விடுமுறைகள் = 22 நாட்கள்

இந்த விடுமுறைகள் தவிர, ஞாயிற்றுக்கிழமைகள் வழக்கம்போல பொது விடுமுறையாகவே இருக்கும். இதனால், அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு 2026 ஆண்டு மொத்தம் 52 ஞாயிறு + 24 அரசு விடுமுறை, என 76 நாட்கள் விடுமுறை நாட்களாக அமைகின்றன. மேலும் அரசு அலுவலகங்களுக்கு மாதத்தில் 2வது மற்றும் 4வது சனிக்கிழமையும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு 2026 ஆண்டு மொத்தம் 52 ஞாயிறு + 22 +24 (2வது மற்றும் 4வது சனிக்கிழமை) அரசு விடுமுறை, என 98 நாட்கள் விடுமுறை நாட்களாக அமைகின்றன.

# தமிழகத்தில் 9 ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம்...

வ.எண் ஐஏஎஸ் அலுவலரின் பெயர் மற்றும் பணியிடம் மாற்றம் செய்யப்படும் பதவி மற்றும் பணியிடம்

1 சத்யபிரதா சாகு ஐஏஎஸ், அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மை செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலாளர் (31.12.2025 அன்று அதுல்யா மிஸ்ரா ஐஏஎஸ் ஓய்வு பெறவுள்ளார்)

2 கே.சு.பழனிசாமி ஐஏஎஸ், நில நிர்வாகம் அரசு செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை

3 கஜலட்சுமி ஐஏஎஸ், ஆணையர், போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர், நில நிர்வாகம்

4 கிரண் குராலா ஐஏஎஸ் (சமூக பாதுகாப்பு திட்டம்) வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் ஆணையர், போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு

5 தேவ் ராஜ் தேவ் ஐஏஎஸ், முதன்மை செயலாளர்/ துணைத் தலைவர், அறிவியல் நகரம் முதன்மை செயலாளர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு உப்பு நிறுவனம்

6 முதன்மை செயலாளர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு உப்பு நிறுவனம் முதன்மை செயலாளர்/ துணைத் தலைவர், அறிவியல் நகரம்


7 மலர்விழி, ஐஏஎஸ், அரசு சிறப்பு செயலாளர், நீர்வளத்துறை ஆணையர், ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி

8 ச.கோபால சுந்தர ராஜ் ஐஏஎஸ், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இயக்குநர், அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி மற்றும் பயிற்சி துறைத் தலைவர்

9 பானோத் ம்ருகேந்தர் லால் ஐஏஎஸ், அரசு துணைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்



பழனி முருகன் கோயில் சார்பில் தைப்பூசம் திருவிழா, பாதயாத்திரையாக வரும் பக்தர்கள் விபத்தில் சிக்காமல் இருப்பதற்காக பத்தாயிரம் ஒளிரும் குச்சிகளை போலீசாரிடம், கோயில் உதவி ஆணையர் லட்சுமி வழங்கினார்.



# 2026 புத்தாண்டு ராசி பலன்: 12 ராசிகளுக்கான பலன்கள் & பரிகாரங்கள்!



2026 ஆம் ஆண்டு புத்தாண்டு ஜோதிட ரீதியாக பல மாற்றங்களையும் புதிய தொடக்கங்களையும் கொண்டுவரும் ஆண்டாக அமைய உள்ளது.

**மேஷம்**

2026 ஆம் ஆண்டு மேஷ ராசிக்காரர்களுக்கு பொறுமையை சோதிக்கும் ஆண்டாக இருக்கும். ஏழரை சனியின் தாக்கம் காரணமாக மன அழுத்தம் அதிகரிக்கலாம். தொழில், பணம் மற்றும் உறவுகளில் மிகுந்த கவனம் தேவை. பருவகால நோய்கள் தொந்தரவு செய்யலாம்.

பரிகாரம்: தினமும் ஹனுமான் சாலிசா பாராயணம் செய்யவும்.

**ரிஷபம்**

இந்த ஆண்டு உங்களுக்கான முன்னேற்ற வாயில்களைத் திறக்கும். குரு பெயர்ச்சியால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், நிதி மற்றும் உறவுகளில் சாதகமான மாற்றங்கள் ஏற்படும். திருமண முயற்சிகள் கைகூடும்.

பரிகாரம்: வெள்ளிக்கிழமைகளில் தானம் செய்யவும்.

**மிதுனம்**

அறிவுசார் பணிகளில் வெற்றி கிடைக்கும் ஆண்டு. எழுத்து, கற்பித்தல், தகவல் தொடர்பு துறையினருக்கு சிறந்த முன்னேற்றம் உண்டு. வருமானம் அதிகரிக்கும். திருமண யோகம் காணப்படுகிறது.

பரிகாரம்: புதன்கிழமைகளில் பசுவுக்கு தீவனம் அளிக்கவும்.

**கடகம்**

உணர்ச்சி ஸ்திரத்தன்மையும் குடும்ப மகிழ்ச்சியும் தரும் ஆண்டு. உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். முதலீடுகள் ஆண்டின் பிற்பகுதியில் நல்ல பலன் தரும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

பரிகாரம்: சிவ வழிபாடு செய்யவும்.

**சிம்மம்**

2026 தைரியத்தையும் சமூக மரியாதையையும் அதிகரிக்கும். வெளிநாட்டு வாய்ப்புகள் கிடைக்கும். திடீர் பண வரவுகள் உண்டு. சகோதரர் ஆதரவு கிடைக்கும். உடல்நலத்தில் கவனம் அவசியம்.

பரிகாரம்: "ஓம் சூர்யாய நமஹ" ஜபம்.

**கன்னி**

ஒழுக்கமும் கடின உழைப்பும் அவசியமான ஆண்டு. அலுவலக அரசியலில் இருந்து விலகி இருக்க வேண்டும். செலவுகளில் கட்டுப்பாடு தேவை. காதல் உறவுகளில் புரிதல் அவசியம்.

பரிகாரம்: பறவைகளுக்கு தானியம் அளிக்கவும்.

**துலாம்**

இணக்கமும் அன்பும் நிறைந்த ஆண்டு. கலை, ஃபேஷன், சினிமா துறைகளில் இருப்பவர்களுக்கு பெயரும் புகழும் கிடைக்கும். திருமண வாழ்வில் இனிமை கூடும். உடல்நலத்தில் கவனம் தேவை.

பரிகாரம்: லட்சுமி பூஜை செய்யவும்.

**விருச்சிகம்**

ஆழமான மாற்றங்களும் ஆராய்ச்சியும் நிறைந்த ஆண்டு. தொழில்நுட்பத் துறையினருக்கு வெற்றி கிடைக்கும். திடீர் லாபங்கள் ஏற்படும். வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை.

பரிகாரம்: செவ்வாய்கிழமைகளில் சுந்தரகாண்டம் பாராயணம்.

**தனுசு**

அதிர்ஷ்டம் நிறைந்த ஆண்டு. குருவின் அருளால் அறிவும் செல்வமும் பெருகும். உயர் கல்விக்கு சிறந்த காலம். குழந்தைகள் மூலம் நல்ல செய்திகள் வரும்.

பரிகாரம்: வியாழன்கிழமைகளில் கடலைப்பருப்பு தானம்.

**மகரம்**

சனியின் தாக்கத்தால் வேகம் குறைந்தாலும், வாழ்க்கையில் ஸ்திரத்தன்மை கிடைக்கும். வேலை மாற்றத்திற்கு ஆண்டின் நடுப்பகுதி ஏற்றது. குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் தீபம் ஏற்றவும்.

**கும்பம்**

ஏழரை சனியின் மத்திய கட்டம் நடைபெறும் ஆண்டு. கடின உழைப்புக்குப் பிறகே வெற்றி கிடைக்கும். சேமிப்பில் கவனம் தேவை. சோம்பலை விட்டு செயல்பட வேண்டும்.

பரிகாரம்: ஏழைகளுக்கு உதவி செய்யவும்.

**மீனம்**

ஆன்மீக விழிப்புணர்வும் பயணங்களும் அதிகரிக்கும் ஆண்டு. வேலைக்காக நீண்ட பயணங்கள் செல்ல நேரிடலாம். தான, தர்மச் செலவுகள் அதிகரிக்கும்.

பரிகாரம்: விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம்.



இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம் காரான் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நடந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### முகத்தை பிரகாசமாக்கும் 10 விதமான இயற்கை அழகு குறிப்புகள்!



1) இயற்கையான முறையில் நம் சருமத்தை பளபளப்பாகவும், ஆரோக்கியமாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ளவே அனைவரும் விரும்புவோம். நம் சருமத்தை மினுமினுப்பாக வைத்துக் கொள்ள விட்டமின் ஈ மற்றும் புரதம் மிகவும் அவசியம். விட்டமின் ஈ மற்றும் புரதம் நிறைந்த உணவுகளை எடுத்துக் கொள்வது அவசியம்.

2) புரதம் என்றதும் நம் நினைவுக்கு முதலில் வருவது முட்டைதான். முட்டை நம் சருமத்தின் நெகிழ்ச்சித் தன்மையை அதிகரிக்க உதவுவதுடன், நீரேற்றமாக வைத்திருக்கவும், வயதான தோற்றத்தை மெதுவாக்கவும் உதவுகிறது. பொலிவான சருமம் பெற வாரத்திற்கு இருமுறையாவது முட்டை மாஸ்க் போடுவது நல்லது.

3) முட்டையின் வெள்ளைக் கருவில் புரதம், மெக்னீசியம், கால்சியம், ஃபோலேட்டுகள், அல்புமின் உள்ளிட்ட விட்டமின்களும், தாதுக்களும் நிறைந்துள்ளன. இதனைக் கொண்டு நாம் அழகான, ஆரோக்கியமான சருமத்தைப் பெற முடியும்.

4) சருமத்தை டோனிங் செய்ய:

வாரம் இரு முறை முட்டையின் வெள்ளைக் கருவை நன்கு நுரை வரும் வரை அடித்து முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் தடவி காய்ந்து போகும் வரை காத்திருந்து பின்பு வெதுவெதுப்பான நீரில் கழுவி வர முகச்சுருக்கம் நீங்கி, சருமத்தின் நிறத்தை மேம்படுத்தி, சருமத்தை இறுக்கமாக்கவும் உதவும்.

5) பருக்களும் வடுக்களும் மறைய:

முட்டையின் வெள்ளைக் கருவுடன் சிறிது எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் தடவி 20 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீர் கொண்டு கழுவ பருக்களால் ஏற்படும் வடுக்களும், கரும்புள்ளிகளும் மறைந்துவிடும்.

6) தேவையற்ற முடிகளை நீக்க:

முட்டையின் வெள்ளைக் கருவை மட்டும் எடுத்து நெற்றி, மூக்கின் இரு பக்கங்களிலும், தாடைப் பகுதியிலும், உதட்டின் மேல் பகுதியிலும் தடவி 20 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவி விட நம் முக அழகை கெடுக்கும் தேவையற்ற முடிகள் உதிர்ந்து விடும். இதனை வாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

7) Scrubbing & ஃபேஸ் பேக்:

முட்டையின் வெள்ளைக் கருவை வைத்து scrubbing and face pack செய்ய நம் முகத்தில் நல்ல மாற்றத்தை நம்மால் உணர முடியும். முட்டை வெள்ளைக் கருவுடன் சர்க்கரை ஒரு ஸ்பூன் சேர்த்து நன்கு கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்ய முகத்தில் உள்ள அழுக்கு மற்றும் இறந்த செல்கள் நீங்கிவிடும். பிறகு குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவி விட முகம் பளிச்சென்று மின்னும்.

8) முட்டை ஃபேஸ் பேக் தயாரிக்க:

ஃபேஸ் பேக் தயார் செய்ய முதலில் ஒரு கண்ணாடி கிண்ணத்தில் முட்டையை உடைத்து அதன் வெள்ளை கருவை விடவும். அத்துடன் ஒரு ஸ்பூன் சர்க்கரை, ஒரு ஸ்பூன் கடலை மாவு, 2 ஸ்பூன் எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் தடவவும். 20 நிமிடங்கள் கழித்து சற்று வெதுவெதுப்பான நீரால் முகத்தை கழுவி விட முகச்சுருக்கங்கள் மறைந்து முகம் இளமையாக பளபளவென ஜொலிக்கும். இதனை வாரம் இரு முறை செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

9) முட்டை ஸ்ட்ராபெரி பேக்:

முட்டையின் வெள்ளை கருவுடன் 4 ஸ்ட்ராபெரி துண்டுகளை மிக்ஸியில் அரைத்து, சிறிது மஞ்சள் பொடி, சிறிது தயிர் கலந்து பேஸ்ட் செய்து முகம், கழுத்துப் பகுதிகளில் தடவி 20 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி விட மிருதுவான சருமத்தைப் பெறலாம்.

10) முட்டை ஓட்ஸ் பேக்:

சிலருக்கு முகத்தில் எண்ணெய் பசை அதிகம் இருக்கும். தொட்டுப் பார்க்க பிசுபிசு என இருக்கும். இதற்கு முட்டையின் வெள்ளைக் கருவுடன் ஓட்ஸ் சிறிதளவு எடுத்து நன்றாக அடித்துக் கொண்டு அந்த கலவையை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி மசாஜ் செய்து கழுவிவிட பிசுபிசுப்பு தன்மை நீங்குவதுடன், முகப்பருக்கள் வருவதும் முற்றிலும் நீங்கி விடும். முட்டையின் வெள்ளை கருவிற்கு முகத்தில் உள்ள எண்ணெய் பசையை நீக்கும் தன்மை உண்டு.

வெயிலினால் ஏற்படக்கூடிய சரும எரிச்சல் மற்றும் சருமத்தில் உள்ள துளைகளை சுத்தம் செய்து ஆரோக்கியமான, மிருதுவான சருமத்தினை பெற உதவும் முட்டையை பயன்படுத்தி அழகு பெறலாமே!

# பியூஷ் கோயல் தமிழகம் வருகை... NDA பலம் பெறுமா, தொகுதி பங்கீடு முடிவாகுமா?



டெல்லி, டிச. 31–

வரும் ஜனவரி 4, 5 ஆகிய தேதிகளில் சென்னை வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இம்முறை தேமு திக, பாமக ஆகிய கட்சி தலைவர்களை சந்தித்து பேசக்கூடும் என்கின்றனர். மேலும் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேசுகிறார்.;

**இரண்டாவது முறை தமிழக பயணம்**

கடந்த முறை அதிமுக பாஜக இடையில் தொகுதி பங்கீடு, தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைக்கப்பட வேண்டிய கட்சிகள், விஜய் குறித்த நிலைப்பாடு உள்ளிட்டவை குறித்து விவாதித்து விட்டு, விரிவான அறிக்கையுடன் டெல்லி சென்று பாஜக தலைமையிடம் விளக்கம் அளித்ததாக கூறப்பட்டது. இந்த சூழலில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கட்சி தலைமையின் அறிவுறுத்தலின் பேரில் மீண்டும் தமிழகம் வரவுள்ளதாக தெரிகிறது.

2026 சட்டமன்றத் தேர்தலுக்கு ஓராண்டிற்கு முன்பே அதிமுக – பாஜக கூட்டணி அமைந்தது. இதன்மூலம் தொண்டர்கள் மத்தியில் இணக்கமான சூழல் ஏற்படும் என்று கூறப்பட்டது. அதன்பிறகு கூட்டணிக்கு வலு சேர்க்கும் வகையில் புதிய கட்சிகள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதுவரை புதிய கட்சிகள் எதுவும் வரவில்லை. ஜி.கே.வாசனின் தமிழ் மாநில காங்கிரஸ் மட்டும் இணக்கமான சூழலில் இருந்து வருகிறது. அதுவும் அதிகாரப்பூர்வமாக உடன்படிக்கைக்கு வரவில்லை. எனவே தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியை வலுப்படுத்துவதில் சிக்கல் நீடிப்பதாகவே பார்க்கப்படுகிறது. இந்த விஷயத்தில் பாஜக தலைமை சரியான முறையில் காய் நகர்த்தாமல் கோட்டை விட்டு விட்டதா? என்ற கேள்வி எழுகிறது. எனவே தான் தேர்தல் நெருங்கும் நேரத்தில் பலகட்ட ஆலோசனைகள் நடத்தி புதிய கட்சிகளை கொண்டு வருவதற்கு காய் நகர்த்தவுள்ளனர்.

பியூஷ் கோயல் இரண்டாவது பயணத்தின் போது ஆடிட்டர் குருமூர்த்தியை சந்தித்து பேசுவதற்கு வாய்ப்பிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் தமிழக பாஜக தலைவர்கள் உடன் தற்போதைய அரசியல் சூழல், அதிமுக – பாஜக கூட்டணியின் வெற்றி வாய்ப்பு குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ள வாய்ப்பிருக்கிறது.

# தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல், அரசு கணினி தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்!

சென்னை, டிச. 31–

அரசு தொழில்நுட்பத் தேர்வு (GTE) மற்றும் அலுவலக ஆட்டோமேஷனில் கணினி (COA) தேர்விற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. 2026–ம் ஆண்டில் பிப்ரவரி மாதம் தேர்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் இத்தேர்வுகள் நடைபெறும். இத்தேர்வுகளை எழுத உள்ளவர்கள் டிசம்பர் 31 முதல் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

இத்தேர்வுகளுக்கு https://tndtegteonline.in/ என்ற ஆன்லைன் இணையதளம் வழியாக விண்ணப்பிக்க வேண்டும். தேர்வர்கள் ஒரு முறை பதிவு செய்து பின்னர் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தேர்வு கட்டணத்தை செலுத்தி விண்ணப்பத்தை நிறைவு செய்யவும்.

தேர்வு கட்டணம்

கணினி சான்றிதழ் தேர்வு பதிவு கட்டணம் ரூ.100, தேர்வு கட்டணம் ரூ.1,500

தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் ஜூனியர் கிரேடு பதிவு கட்டணம் ரூ.30, தேர்வு கட்டணம் ரூ.100

சுருக்கெழுத்து இடைநிலை ஆங்கிலம் ரூ.150

சீனியர் கிரேடு ரூ.160

அதிவேக தேர்வுரூ.230

முக்கிய நாட்கள்

விவரம்தேதிகள்

விண்ணப்பம் தொடக்கம் 30.12.2025

விண்ணப்பிக்க கடைசி நாள் 19.01.2026

சுருக்கெழுத்து தேர்வு 07.02.2026 – 08.02.2026

கணக்கியல் தேர்வு 09.02.2026

தட்டச்சு தேர்வு 14.02.2026 – 15.02.2026


கணினி வழி தட்டச்சு, சுருக்கெழுத்து (Remote) 23.02.2026 – 20.04.2026

கணினி வழி தட்டச்சு, சுருக்கெழுத்து 21.04.2026 முதல்

முடிவுகள் வெளியீடு (உத்தேசம்) ஏப்ரல் 30 மற்றும் மே 20–ம் தேதி வெளியிடப்படும்.

தேர்ச்சி பெற்றவர்களுக்கு டிஜிட்டல் சான்றிதழ் 27.05.2026 முதல் அரசு கணினி சான்றிதழ் மற்றும் தொழில்நுட்பத் தேர்வுகளுக்கு உரிய இணையதளத்தில் ஜனவரி 19–ம் தேட்திக்குள் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகி றார்கள்.

# CBSE 2026 பொதுத்தேர்வு தேதியில் மாற்றம்; 10, 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு புதிய தேதிகள் அறிவிப்பு - முழு விவரம்



சென்னை, டிச. 31–

10 மற்றும் 12–ம் வகுப்பிற்கு 2026–ம் ஆண்டு மார்ச் 3–ம் தேதி நடைபெறவிருந்த பாடங்களுக்கான தேர்வுகள் மட்டும் மாற்றப்பட்டுள்ளது. இதர தேர்வுகள் அட்டவணையில் படி திட்டமிட்டப்படி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்பு முந்தைய தேதி புதிய தேதிகள்

10–ம் வகுப்பு மார்ச் 3, 2026 மார்ச் 11,2026

12–ம் வகுப்பு மார்ச் 3, 2026 ஏப்ரல் 10, 2026

நிர்வாக காரணங்களில் இந்த தேதி மாற்றப்படுவதாகவும், பள்ளிகள் மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு தேதி மாற்றம் குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை தவிர அக்டோபர் மாதம் வெளியிட்ட இறுதி பொதுத்தேர்வு அட்டவணையின் படி, அனைத்து தேர்வுகளும் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

அதே போன்று, மாற்றப்பட்ட தேர்வு தேதிகளின் அடிப்படையில் மாணவர்களுக்கான அட்மிட் கார்டு வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாற்றப்பட்ட பாடங்கள்

10–ம் வகுப்பிற்கு 13 பாடங்களும் 12–ம் வகுப்பிற்கு ஒரு பாடமும் மாற்றப்படுகிறது.

10–ம் வகுப்பு 12 – ம் வகுப்பு

திபெத்தியன் சட்ட படிப்புகள்

ஜெர்மன்

என்சிசி (National Cabet Corp)

போதி (Bhoti)

போடோ (BODO)

தங்குல் (Tangkhul)

ஜப்பானிய மொழி

புடியா

ஸ்பானிஷ்

காஷ்மீரி

மிசோ

பஹாசா மலாய் (bahasa melayu)

புக் கீப்பர் மற்றும் கணக்கியல்

சிபிஎஸ்இ பொதுத்தேர்வு அட்டவணை 2026

2025–26 கல்வி ஆண்டு சிபிஎஸ்இ 10 மற்றும் 12–ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு உத்தேச அட்டவணை இந்த வருடம் செப்டம்பர் மாதமே வெளியானது. அதனைத்தொடர்ந்து, இறுதி அட்டவணை தேர்விற்கு 110 நாட்களுக்கு முன்பாகவே அக்டோபர் மாதம் வெளியானது. இந்தாண்டு முதன்முறையான 10–ம் வகுப்பிற்கு 2 முறை பொதுத்தேர்வு நடத்தப்பட உள்ளது.

2 வகுப்புகளுக்கும் பொதுத்தேர்வு 2026–ம் ஆண்டில் பிப்ரவரி 17 முதல் தொடங்குகிறது. 10–ம் வகுப்பில் 83 பாடங்களுக்கு மார்ச் 10 வரை தேர்வு நடைபெற உள்ளது. அதே போன்று, 12–ம் வகுப்பிற்கு 120 பாடங்களுக்கு ஏப்ரல் 9 வரை தேர்வு நடைபெறவுள்ளது. காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை தேர்வு நடத்தப்படும்.

இரண்டாம் கட்ட 10–ம் வகுப்பு பொதுத்தேர்வு மே 15 முதல் 30 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**அட்மிட் கார்டு வெளியீடு எப்போது?**

தேர்விற்கு 1 மாதத்திற்கு முன்பாகவே மாணவர்களுக்கான அட்மிட் கார்டு தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படும். அந்த வகையில், ஜனவரி மாதம் சிபிஎஸ்இ பொதுத்தேர்வு அட்மிட் கார்டு வெளியாகும். பள்ளிகளின் வழியாக மாணவர்கள் அட்மிட் கார்டை பதிவிறக்கம் செய்து பெற்றுகொள்ளலாம்.




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## ஈரோடு சத்துணவில் 64 காலியிடங்கள்

Organization Name: Nutritious Meal Centers functioning in schools within Erode District
Job Category: Tamilnadu Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 64 Cook Assistant Posts
Place of Posting: Erode
Starting Date: 16.12.2025
Last Date: 09.01.2025
Apply Mode: Offline
Official Website: https://Erode.nic.in/

## ஐ.சி.எப்., ரயில் தொழிற்சாலையில் 25 காலியிடங்கள்

சென்னை ரயில் பெட்டி தொழிற்சாலையில் (ஐ.சி.எப்.,) விளையாட்டு ஒதுக்கீடு காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சீனியர் கிளர்க் 2, ஜூனியர் கிளர்க் 8, டெக்னீசியன் 15 என மொத்தம் 25 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / பிளஸ் 2/ டிப்ளமோ / டிகிரி
வயது: 18 – 25 (19.1.2025ன் படி)
கூடுதல் தகுதி: சர்வதேச, தேசிய, பல்கலை போட்டிகளில் சான்றிதழ்
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 250
கடைசிநாள்: 19.1.2026
விவரங்களுக்கு: pb.icf.gov.in

## ஐ.ஓ.சி., நிறுவனத்தில் 394 காலியிடங்கள்

மத்திய அரசின் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் (ஐ.ஓ.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜூனியர் இன்ஜினியரிங் அசிஸ்டென்ட் 374, ஜூனியர் குவாலிட்டி கன்ட்ரோல் 20 என மொத்தம் 394 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பிளஸ் 2 / டிப்ளமோ / பி.எஸ்சி.,
வயது: 18 – 26 (31.12.2025ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, ஸ்கில் தேர்வு
தேர்வு மையம்: சென்னை
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லை ன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 9.1.2026
விவரங்களுக்கு: iocl.com

## மத்திய அரசில் (என்.சி.இ.ஆர்.டி.,) 173 கிளார்க் காலியிடங்கள்

தேசிய கல்வி ஆராய்ச்சி, பயிற்சி கவுன்சிலில் (என்.சி.இ.ஆர்.டி.,)

காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'கிளார்க்' 54, ஆய்வக உதவியாளர் 25, ஸ்டோர் கீப்பர் 19, டெக்னீசியன் 8, இன்ஜினியரிங் அசிஸ்டென்ட் 7, புரடக்சன் அசிஸ்டென்ட் 5, அசிஸ்டென்ட் இன்ஜினியர் 4 உட்பட மொத்தம் 173 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பிளஸ் 2 / ஐ.டி., / டிப்ளமோ / பட்டப்படிப்பு
வயது: 18 – 27, 18 – 30, 18 – 35 (16.1.202சூன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1000 – 1500
கடைசிநாள்: 16.1.2026
விவரங்களுக்கு: ncert.nic.in

## யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் 153 காலியிடங்கள்

'அப்ரென்டிஸ்' பிரிவில் கர்நாடகா 26, மகாராஷ்டிரா 23, தமிழகம் 19, ராஜஸ்தான் 18, கேரளா 10 உட்பட மொத்தம் 153 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு
வயது: 21–28 (1.12.2025ன் படி)
ஸ்டைபண்டு: மாதம் ரூ. 9000
பயிற்சி காலம்: ஓராண்டு
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 20.1.2026
விவரங்களுக்கு: uiic.co.in

## ரிசர்வ் வங்கியில் (ஆர்.பி.ஐ.,) 93 காலியிடங்கள்

ரிசர்வ் வங்கியில் (ஆர்.பி.ஐ.,) ஒப்பந்த காலியிடங்களுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.டி., 33, ரிஸ்க் அனலிஸ்ட் 19, டேட்டா சயின்டிஸ்ட் 6, டேட்டா இன்ஜினியர் 4, அக்கவுன்ட்ஸ் 3 உட்பட மொத்தம் 93 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,/ பி.எஸ்சி., / எம்.எஸ்சி., / எம்.ஏ.,/ சி.ஏ.,
வயது: 27 – 40 , 30 – 45 (6.1.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 600. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 100
கடைசிநாள்: 6.1.2026
விவரங்களுக்கு: rbi.org.in






# புதுசு புதுசா யோசிக்கிறாங்க..!! ஐஸ் பிரியாணி தெரியும்... அது என்ன 'ஐஸ்கிரீம் பிரியாணி'..!

சமீபகாலமாக சமையலில் புதுமை செய்வதாக கூறிக்கொண்டு சிலர் புதுமையான ரெபிசிகளை செய்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு அதை வைரலாக்கி வருகின்றனர். அந்த வரிசையில் ஒன்றாக தான் பிரியாணி ஐஸ்கிரீம் செய்து இணையத்தையே அதிர வைத்துள்ளார் சிங்கப்பூரை சேர்ந்த பெண்.

அந்த பெண் வெளியிட்டுள்ள வீடியோவில் பிரியாணியின் சுவையை அப்படியே ஐஸ்கிரீம் உள்ளே கொண்டு வந்திருக்கிறார். பொதுவாக பிரியாணி என்றாலே அனைவருக்கும் நினைவுக்கு வருவது அதன் காரசாரமான மசாலா தான். ஆனால் அந்த மசாலாக்களை வைத்தே ஒரு இனிப்பு உணவை தயார் செய்துள்ளார். முதலில் பால் மற்றும் கிரீமில் பட்டை, ஏலக்காய், லவங்கம், பிரியாணி இலை போட்டு மசாலாவின் வாசனை பாலில் இறங்கும் வரை கொதிக்க விடுகிறார். பின்னர் அதில் பிரியாணி அரிசியை போட்டு வேக வைத்து அந்த வாசனையை முழுவதுமாக பாலில் மாற்றுகிறார். கடைசியாக அந்த அரிசியை வடிகட்டி விட்டு வெறும் பால் மற்றும் கிரீமை வடிக்கட்டி எடுத்து கொண்டு பிரிட்ஜில் 2 – 3 மணிநேரம் குளிர்வித்து எடுத்தால் பிரியாணி ஐஸ்கிரீம் ரெடியாகிவிடும்.



# டேவிட்சன் தேவாசீர்வாதம் உள்பட 70 ஐபிஎஸ் அதிகாரிகள் அதிரடி மாற்றம்! தமிழ்நாடு அரசு!

சென்னை, டிச. 31–

தமிழகம் முழுவதும் பதவி உயர்வு மற்றும் நிர்வாக காரணங்களுக்காக 70 ஐ.பி.எஸ். அதிகாரிகள் அதிரடியாக மாற்றப்பட்டனர். டேவிட்சன் தேவாசீர்வாதம் ஆயுதப்படை டி.ஜி.பி.யாக நியமிக்கப்பட்டார்.




இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது:–

டேவிட்சன் தேவாசீர்வாதம்– சட்டம்–ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி.யாக பணியாற்றி வந்த இவர், பதவி உயர்வு பெற்று, ஆயுதப்படை டி.ஜி.பி.யாக மாற்றப்பட்டார்.

சந்தீப் மிட்டல்– 'சைபர் கிரைம்' கூடுதல் டி.ஜி.பி.யான இவர், பதவி உயர்வு பெற்று அதே பிரிவில் டி.ஜி.பி. ஆனார்.

பால நாகதேவி– பொருளாதார குற்றப்பிரிவு கூடுதல் டி.ஜி.பி.யான இவர், பதவி உயர்வு பெற்று அதே பிரிவில் டி.ஜி.பி.யாக நியமிக்கப்பட்டார். இவர் சிவில் சப்ளை சி.ஐ.டி. பிரிவு டி.ஜி.பி. பொறுப்பையும் கூடுதலாக கவனிப்பார்.

அன்பு– சி.பி.சி.ஐ.டி. ஐ.ஜி.யான இவர் பதவி உயர்வு பெற்று அதே பிரிவில் கூடுதல் டி.ஜி.பி.யாக நியமிக்கப்பட்டார்.

பிரேம் ஆனந்த் சின்ஹா– தெற்கு மண்டல ஐ.ஜி.யான இவர், கூடுதல் டி.ஜி.பி.யாக பதவி உயர்வு பெற்றார். ஆவடி கமிஷனராக பதவியேற்பார்.

செந்தில்குமார்– மேற்கு மண்டல ஐ.ஜி.யான இவர், பதவி உயர்வு பெற்று, சென்னை டி.ஜி.பி. அலுவலகத்தில் தலைமையக கூடுதல் டி.ஜி.பி. யாக பதவியேற்பார்.

அனிஷா உஷேன்– சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஐ.ஜி.யாக உள்ள இவர், பதவி உயர்வு பெற்று பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு பிரிவு கூடுதல் டி.ஜி.பி.யாக மாற்றப்பட்டார்.

சங்கர்– ஆவடி போலீஸ் கமிஷனரான இவர், சிறைத்துறை கூடுதல் டி.ஜி.பி. ஆனார். அமல்ராஜ்– அமலாக்கப்பிரிவு கூடுதல் டி.ஜி.பி. யான இவர், தாம்பரம் போலீஸ் கமிஷனராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட அதிகாரிகள் உள்பட 70 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்!

சென்னை, டிச. 31–

அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தொடங்கியுள்ளது. வரும் சட்டமன்ற தேர்தலை எதிர்நோக்கும் வகையில் தேர்தல் பணிகள் குறித்து இன்றைய தினம் எடப்பாடி பழனிசாமி அதிமுகவின் மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசனை செய்ய உள்ளார். குறிப்பாக அமைப்பு ரீதியாக உள்ள 82 மாவட்ட செயலாளர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர். தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக, பாஜக இடையே பேச்சுவார்த்தை முதற்கட்டமாக நிறைவடைந்த நிலையில் இத்தகைய பேச்சுவார்த்தை குறித்து இன்றைய தினம் மாவட்ட செயலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

எடப்பாடி பழனிசாமி மற்றும் பியூஷ் கோயல் ஆகிய இருவரும் சந்தித்தபோது பேசப்பட்ட கருத்துக்கள், பரிமாற்றங்கள் குறித்தும் இன்றைய தினம் எடுத்துரைக்க உள்ளார். சென்னை மற்றும் கோவை மாவட்டத்தில் அதிமுகவிற்கு சாதகமாக இருக்கக்கூடிய தொகுதிகள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் போட்டியிடக்கூடிய தொகுதிகளை பாஜக கேட்பதாகவும், அந்த தொகுதிகளில் பாஜகவை ஒதுக்கலாமா என்பது குறித்தான கருத்துக்களையும் இன்றைய தினம் அதிமுகவின் மாவட்ட செயலாளர்களிடம் கேட்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



அதே போல் அதிமுக வெற்றிவாய்ப்புகள் உள்ள தொகுதிகளை பாஜக ஒதுக்கீடு செய்வதில் இருக்கக்கூடிய சிக்கல்கள் குறித்தும் இன்றைய தினம் எடப்பாடி பழனிசாமி கலந்துரையாட உள்ளார். அதிமுக சார்பில் 1 வேட்புமனு விநியோகம் இன்றுடன் நிறைவடையும் நிலையில் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்தும் ஆலோசிக்க வாய்ப்பு உள்ளது. கடந்த 2016மற்றும் 2021 சட்டமன்ற தேர்தல்களை ஒப்பிடும் போது 2026 சட்டமன்ற தேர்தலுக்கான விருப்பமனு வழங்கக்கூடிய பணி என்பது மந்தமாக இருந்ததாக கட்சி தலைமை ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், அது குறித்தான காரணங்கள் என்ன என்பது குறித்தும் ஆலோசனை செய்யப்பட உள்ளது. பூத் கமிட்டி அமைப்பது தொடர்பாக கரூர், சென்னை உள்ளிட்ட சில மாவட்டங்களில் பூத் கமிட்டி அமைப்பதற்கான பணிகள் மந்தமாக இருக்கக்கூடிய நிலையில் அந்த மாவட்டங்களில் எதனால் பூத் கமிட்டி அமைக்கக்கூடிய பணி தொய்வில் இருக்கிறது என்பது குறித்தும் விளக்கம் கேட்க உள்ளார். தேர்தலுக்கு சில மாதங்கள் இருப்பதன் காரணமாக தேர்தல் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் எனவும் எந்தெந்த மாவட்டங்களில் அதிமுக பலவீனமாக இருக்கிறதோ அந்த மாவட்டங்களில் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு உள்ளது.



நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்த மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ஆர் என் . ரவியை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பூங்கொத்து வழங்கி வரவேற்றார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா உள்ளார்.

# காங்கிரஸ் உட்கட்சி விவகாரத்தில் தலையிட வேண்டாம் - கூட்டணி கட்சிகளுக்கு மாணிக்கம் தாகூர் எம்.பி. எச்சரிக்கை!

சென்னை, டிச. 31–



காங்கிரஸ் கட்சியின் உட்கட்சி விவகாரத்தில் கூட்டணி கட்சிகள் தலையிட வேண்டாம் என்று விசிக, மதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் எச்சரிக்கை விடுத்துள்ளார். திருமாவளவன், வைகோ, சண்முகம், வீரபாண்டியன் ஆகிய தலைவர்களை குறிப்பிட்டு மாணிக்கம் தாகூர் பதிவிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் தெரிவித்திரு ப்பதாவது:–

விசிக, மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் காங்கிரஸ் கட்சியின் ஒரு நிர்வாகி மீது நடவடிக்கை எடுக்க இந்திய எதிர்கட்சி தலைவ ரிடம் கோரிய செய்தியை தனியார் நாளிதழில் படித்தே ன். இது ஒரு அடிப்படை கேள்வியை எழுப்புகிறது:

காங்கிரஸ் தனது உள்கட்சி விஷயங்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூட்டணி கட்சிகள் உத்தரவிடத் தொடங்கியது எப்போது? தங்களது உள்கட்சி விஷயங்களில் இதுபோன்ற பொது கருத்துகளை இக்கட்சிகள் ஏற்றுக்கொள்வார்களா? தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை ரவிக்குமார் எம்.பி., துரை வைகோ, சண்முகம், வீரபாண்டியன் ஆகியோரிடம் "உங்கள் கட்சி உறுப்பினர்க ளை இப்படிச் சமாளியுங்கள்" என்று சொன்னால், அவர்கள் அதை சகிப்பார்களா?

கூட்டணிகள் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் உருவாகின்றன – பொது அழுத்த அரசியலால் அல்ல. ஏதேனும் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அவை ஊடக அறிக்கைகள் மூலம் அல்ல; கூட்டணி மேடைகளுக்குள் பேசப்பட வேண்டும்.

ஒரு கூட்டணி கட்சியின் உள்கட்சி செயல்பாடுகளை பொது வெளியில் விமர்சிப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை உருவாக்குகிறது; இது பாஜக – ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளுக்கு எதிரான கூட்டு வலிமையையே பலவீனப்படுத்தும். இது கட்சி செயல் வீரர்கள் தன்மான உணர்வை தூண்டும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைமைகள் தங்களது மாநில செயலாளர்களுக்கு குறைந்தபட்ச அரசியல் மரியாதையையும், கூட்டணி ஒழுக்கத்தையும் பேண அறிவுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், அண்ணன் வைகோ, திருமாவளவன் அண்ணனும், கூட்டணி கட்சிகளுடன் நடக்கும் விஷயங்களில் "லட்சுமண ரேகை"யை மதிக்குமாறு தங்களது எம்.பிக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒற்றுமை என்பதன் அர்த்தம் மௌனம் அல்ல – ஆனால் அது கட்டுப்பாட்டையும் பொறுப்பையும் குறிக்கிறது. கூட்டணி தர்மம் அனைவருக்கும் சமமாகவே பொருந்த வேண்டுமே ஒழிய அது காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் அல்ல. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சபரிமலை மகர ஜோதிக்கு 35,000 பக்தர்கள் மட்டுமே அனுமதி!

சபரிமலை, டிச. 31–



மகரவிளக்கு பூஜைக்காக செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கோயில் நடை மீண்டும் திறக்கப்பட்டது. இன்று அதிகாலை முதல் பக்தர்கள் சாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.


மண்டல–மகரவிளக்கு யாத்திரை காலத்தின் முக்கிய நிகழ்வான மகரவிளக்கு பூஜை மற்றும் ஜோதி தரிசனம் வரும் ஜன. 14–ஆம் தேதி நடைபெற உள்ளது.

வழக்கமாக நாளொன்றுக்கு 70,000 பக்தர்கள் வரை சபரிமலையில் தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டு வரும் சூழலில், மகர ஜோதி அன்று 35,000 பக்தர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்க தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பான அதிகாரப்பூர்வ இன்னும் வெளியிடப்படவில்லை.

மகரவிளக்கு பூஜைக்குப் பிறகு பக்தர்கள் 19–ஆம் தேதி வரை சுவாமி தரிசனம் செய்யலாம். தொடர்ந்து, 20–ஆம் தேதி பந்தளம் அரச குடும்ப பிரதிநிதியின் சிறப்பு தரிசனத்துக்குப் பின் கோயில் நடை அடைக்கப்படும்.

# பிராணப் பிரதிஷ்டை இரண்டாமாண்டு: ராஜ்நாத் சிங், யோகி ஆதித்யநாத் வழிபாடு!



அயோத்தி, டிச. 31–

பிராணப் பிரதிஷ்டையின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி ராமர் கோயில் வளாகத்தில் சடங்குகள் தொடங்கின.

இதுதொடர்பாக அறங்காவலர் அனில் மிஸ்ரா கூறுகையில், ராமர் பிரதிஷ்டை செய்யப்பட்டு இரண்டாமாண்டு விழாவில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஸ்ரீராமம் கோயிலில் நடைபெறும் பிராண பிரதிஷ்டா–துவாதசி நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். ராஜ்நாத் சிங் முன்னிலையில் ஸ்ரீ மூல ராமருக்குச் சடங்குகள் அபிஷேகம் செய்யப்படும், அதைத் தொடர்ந்து ஆரத்தி நடைபெறும் என்று அவர் கூறினார். பாதுகாப்புத் துறை அமைச்சரும் உத்தரப் பிரதேச முதல்வருமான யோகி ஆதித்யநாத்தும் கோயில் வளாகத்தின் வெளியேறும் வாயிலுக்கு அருகிலுள்ள அங்கத் திலாவில் கூட்டத்தில் உரையாற்றுவார்கள் என்றும் மிஸ்ரா கூறினார். இந்த விழாவில் கலந்துகொள்ள அயோத்தியைச் சேர்ந்த சுமார் 1,200 துறவிகள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் மிஸ்ரா தெரிவித்தார்.

# ஜனவரியில் ஆஜராக விஜய்க்கு சம்மன்? சிபிஐ திட்டம்!



டெல்லி, டிச. 31–

கரூர் வழக்கு விசாரணையின் இறுதிகட்டமாக தில்லியில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் தவெக தலைவர் விஜய்யை நேரில் ஆஜராக சம்மன் அனுப்பத் திட்டமிட்டுள்ளனர். வருகின்ற ஜனவரி மாதத்தில் சம்மன் அனுப்பப்பட்டு விஜய்யிடம் நேரில் விசாரிக்க சிபிஐ திட்டமிட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பாக தில்லியில் நேற்றிரவு செய்தியாளர்களிடம் கருத்துகளை தெரிவிக்க தவெக நிர்வாகிகள் மறுத்துவிட்டனர்.

# கரூர் வழக்கு: தவெக நிர்வாகிகளிடம் 3 -வது நாளாக சிபிஐ அதிகாரிகள் விசாரணை!



புதுடெல்லி, டிச. 31–

கரூர் கூட்ட நெரிசல் வழக்கின் விசாரணைக்காக சிபிஐ அலுவலகத்தில் 3–வது நாளாக தவெக நிர்வாகிகள் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்டோர் ஆஜராகியுள்ளனர். அவர்களிடம் சி.பி.ஐ. அதிகாரி சுனில்குமார் தலைமையிலான குழுவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ப்ரியங்கா காந்தி மகனுக்கு நிச்சயதார்த்தம்! மணமகள் யார்?




டெல்லி, டிச. 31–


காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவரும் மக்களவை உறுப்பினருமான ப்ரியங்கா காந்தியின் மகன் ரேஹான் வாட்ரா தனது காதலி அவிவா பெய்க் உடன் நிச்சயதார்த்தம் செய்து கொண்டுள்ளார். 25 வயதான ரேஹான், 7 ஆண்டுகளாக தனது காதலியாக இருந்த அவிவா பெய்க்கை திருமணம் செய்து கொள்ள முன்வந்துள்ளார். ப்ரியங்கா காந்தி மற்றும் தொழிலதிபர் ராபர்ட் வாட்ரா ஆகியோரின் மகன் ரேஹான் கடந்த 7 ஆண்டுகளாக அவிவாவை காதலித்து வந்துள்ளார். இருவரது குடும்பங்களும் இந்த உறவுக்கு தங்களது ஒப்புதலை வழங்கியுள்ளன. சமீபத்தில் நடந்த ஒரு தனிப்பட்ட நிகழ்வில் ரேஹான் அவிவாவிடம் திருமண முன்மொழிவை வைத்தார் என்றும், அவிவா அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார் என்றும் கூறப்படுகிறது. வரும் மாதங்களில் திருமணம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சம்பளம் முதல் சிலிண்டர் விலை வரை! நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய 10 முக்கிய மாற்றங்கள்!

டெல்லி ,டிச. 31–

புது வருடம் ஜனவரி 1, 2026 முதல் அமலுக்கு வரும் இந்த மாற்றங்கள், மில்லியன் கணக்கானவர்களை அல்ல, பில்லியன் கணக்கான இந்தியர்களை நேரடியாக பாதிக்கும். அதாவது வங்கி, விவசாயம், வரிகள், டிஜிட்டல் சேவைகள், சமூக ஊடகங்கள், சம்பளம் மற்றும் மானியங்கள் என கிட்டத்தட்ட ஒவ்வொரு துறையும் புத்தாண்டு முதல் மாறப்போகிறது. ஜனவரி 1 முதல் அமலுக்கு வரும் 8–வது ஊதியக் குழு, பான்–ஆதார் இணைப்பு, விவசாயிகளுக்கான புதிய விதிகள் மற்றும் எரிவாயு விலை குறைப்பு போன்ற 10 முக்கிய மாற்றங்கள் குறித்து விரிவாகத் தெரிந்துகொள்ளு ங்கள்.

யாருடைய சம்பளம் அதிகரிக்கும்?, விவசாயிகளுக்கு என்ன நன்மைகள்?, எந்தெந்த ஆவணம் அப்டேட் செய்ய வேண்டும்?, எந்த டிஜிட்டல் தளத்திற்கு கட்டுப்பாடுகள் அதிகரிக்கும்?, சிலிண்டர் விலையில் என்ன மாற்றம் ஏற்படும்?, வங்கி விதிகளில் என்ன மாற்றம்? போன்ற 2026–ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் அமலுக்கு வரவுள்ள 10 முக்கிய மாற்றங்களை தெரிந்துக்கொள்ளுவோம்.




**1. 8–வது ஊதியக் குழு**

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாக, 8–வது ஊதியக் குழு 2026 ஜனவரி 1 முதல் அமல்படுத்தப்படலாம். இதன் மூலம் அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச ஊதியம் ₹18,000–லிருந்து ₹41,000 வரை உயர வாய்ப்புள்ளது.

**2. அகவிலைப்படி (DA) உயர்வு**

ஜனவரி 2026–க்குள் அகவிலைப்படி 70% வரை உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது அடிப்படை ஊதியத்துடன் இணைக்கப்படலாம், இதனால் ஊழியர்களின் கைக்கு வரும் சம்பளம் 25% முதல் 30% வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**3. விவசாயிகளுக்கு 'ஃபார்மர் ஐடி' (Farmer ID) கட்டாயம்**

பிஎம் கிசான் (PM–Kisan) திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ₹6,000 நிதியுதவி பெறும் விவசாயிகள், 2026 ஜனவரி முதல் 'ஃபார்மர் ஐடி' வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட உள்ளது. இது இல்லையென்றால் நிதியுதவி நிறுத்தப்படலாம்.

**4. கிரெடிட் ஸ்கோர்**

தற்போது 15 நாட்களுக்கு ஒருமுறை அப்டேட் செய்யப்படும் கிரெடிட் ஸ்கோர், ஏப்ரல் 2026 முதல் ஒவ்வொரு 7 நாட்களுக்கும் (வாரந்தோறும்) அப்டேட் செய்யப்படும். இதனால் கடன் பெறுபவர்களுக்கு விரைவான பலன் கிடைக்கும்.

**5. பான் – ஆதார் இணைப்பு:**

பான் கார்டை ஆதாருடன் இணைக்க 2025 டிசம்பர் 31 கடைசி நாளாகும். அவ்வாறு இணைக்காவிட்டால், ஜனவரி 1, 2026 முதல் உங்கள் பான் கார்டு செயலிழந்துவிடும். வங்கிப்பரிவர்த்தனைகள் மற்றும் வரி ரீஃபண்ட் பெறுவதில் சிக்கல் ஏற்படும்.

**6. மெசேஜிங் ஆப்ஸ்களில் புதிய விதிகள்:**

வாட்ஸ்அப் (WhatsApp), டெலிகிராம் போன்ற செயலிகளைப் பயன்படுத்துபவர்கள் 90 நாட்களுக்கு ஒருமுறை தங்கள் சிம் கார்டு செயல்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், கணினியில் பயன்படுத்தப்படும் 'வெப் வெர்ஷன்' 6 மாதங்களுக்கு ஒருமுறை தானாக லாக்–அவுட் ஆகும்.

**7. டிஜிட்டல் ரேஷன் கார்டு மற்றும் வருகைப்பதிவு**

ரேஷன் கார்டுகளில் பெயர் சேர்த்தல், முகவரி மாற்றம் போன்ற பணிகள் முற்றிலும் ஆன்லைன் மயமாக்கப்படும். அதேபோல், அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் டேப்லெட் (Tablet) மூலம் டிஜிட்டல் வருகைப்பதிவு முறை அமலுக்கு வரும்.

**8. சமூக வலைதளக் கட்டுப்பாடு**

16 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவதில் கூடுதல் கட்டுப்பாடுகள் வரவுள்ளன. பெற்றோரின் அனுமதி மற்றும் வயதுச் சான்று சரிபார்ப்பு போன்றவை கட்டாயமாக்கப்பட வாய்ப்புள்ளது.

**9. சிலிண்டர் விலை குறைப்பு**

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை சரிந்துள்ளதால், 2026 ஜனவரி முதல் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையில் ₹30 முதல் ₹40 வரை குறைக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

10. வங்கி வட்டி விகிதங்கள்

எஸ்பிஐ (SBI), பிஎன்பி (PNB) மற்றும் ஹெச்டிஎஃப்சி (HDFC) போன்ற வங்கிகள் வட்டி விகிதங்களைக் குறைப்பது குறித்தும், புதிய ஃபிக்சட் டெபாசிட் (FD) திட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்தும் முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளன.

நன்றி ! நன்றி!! நன்றி!!!

சக்திதேவி அறக்கட்டளை
(சக்தி மசாலா நிறுவனங்களின் ஓர் அங்கம்)
ஈரோடு - 638 004.
SERVICE TO HUMANITY IS THE BEST WORK OF LIFE
SAKTHI MASALA

22.12.2025 ம் தேதி ஈரோடு, சக்தி துரைசாமி திருமண மாளிகையில் நடைபெற்ற வாழ்நாள் சாதனையாளர் விருது, சேவை அமைப்புகளுக்கு நிதி உதவி, மரங்களின் காவலர் விருது, கல்வி ஊக்கத்தொகை, உயர்கல்வி உதவித்தொகைகள் வழங்கிய சக்திதேவி அறக்கட்டளையின் 26 வது ஐம்பெரும் விழாவில்

கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியும், சேவை அமைப்புகளுக்கு நிதியுதவி மற்றும் மரங்களின் காவலர் விருதுகள் வழங்கி விழா பேருரையாற்றிய சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசரும், கௌரவக் கொலை தடுப்பு ஆணையத்தின் தலைவருமான
திரு. K.N.பாட்ஷா அவர்களுக்கும்,

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்று ஏற்புரையாற்றிய திருப்பூர் SKY குரூப் நிறுவனங்களின் தலைவரும், வனம் இந்தியா பவுண்டேசன் நிறுவனருமான திரு.SKY.V.சுந்தரராஜ் அவர்களுக்கும்,

குத்துவிளக்கேற்றிய திருமதி. சரோஜா சுந்தரராஜ் அவர்களுக்கும்,

பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவ/மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றிய மாநில நிதிக்குழுவின் தலைவர்
திரு. கா.அலாவுதீன், இ.ஆ.ப., (பணிநிறைவு) அவர்களுக்கும்,

பனிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவ / மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றிய கோவை, சிறுதுளி அமைப்பின் அறங்காவலர்
திருமதி. வனிதா மோகன் அவர்களுக்கும்,

உயர்கல்வி உதவித்தொகை வழங்கி வாழ்த்துரை வழங்கிய திண்டல் பாரதி வித்யாபவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர்
டாக்டர் L.M.ராமகிருஷ்ணன் அவர்களுக்கும்,

மற்றும் முக்கிய விருந்தினர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும், பெற்றோர்களுக்கும், பத்திரிக்கை, ஊடகத் துறையை சார்ந்த நண்பர்களுக்கும், எங்களுக்கு ஆதரவு கொடுக்கும் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், இல்லத்தரசிகள் மற்றும் அனைத்து துறையை சார்ந்தவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு
முனைவர் P.C.துரைசாமி - முனைவர் சாந்தி துரைசாமி
குடும்பத்தினர் மற்றும் பணியாளர்கள்
சக்தி மசாலா நிறுவனங்கள், சக்திதேவி அறக்கட்டளை, ஈரோடு.
தளிர்

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020